செய்தி வெளியீடு எண். 187 நாள்: 09.04.2018

**பள்ளிக்கல்வித் துறை சார்பாக நீட் போட்டி தேர்வுகளுக்கான உண்டு, உறைவிடப் பயிற்சி முகாமினை மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் திரு.ஆர்.சுடலைகண்ணன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் தொடங்கி வைத்தனர்**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கவரப்பேட்டை ஆர்.எம்.கே. பொறியியல் கல்லூரியில் பள்ளிக்கல்வித் துறை சார்பாக நீட் போட்டி தேர்வுகளுக்கான உண்டு, உறைவிடப் பயிற்சி முகாமினை மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் திரு.ஆர்.சுடலைகண்ணன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் இன்று (09.04.2018) தொடங்கி வைத்தனர்.

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது

தமிழக அரசினால் மாணவர்களின் நலன் கருதி அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களில் மத்திய அரசால் நடத்தப்படும் நீட் (NEET) தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களில் தமிழ் வழியில் தேர்வெழுத விண்ணப்பித்தவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கவரப்பேட்டை, ஆர்.எம்.கே. பொறியியல் கல்லூரியில் 09.04.2018 முதல் 02.05.2018 வரை உண்டு உறைவிட பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதில் திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களை சேர்ந்த கீழ்காணும் விவரப்படி 388 மாணவர்களுக்கு உண்டு உறைவிட பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆர்.எம்.கே. பொறியியல் கல்லுரி, ஆர்.எஸ்.எம் நகர் கவரப்பேட்டை, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் என்ற மையத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் 100 மாணவர்களும், சென்னை மாவட்டத்தில் 9 மாணவர்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 59 மாணவர்களும், வேலூர் மாவட்டத்தில் 57 மாணவர்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 70 மாணவர்களும் மற்றும் விழுப்புரம் மாவட்டில் 93 மாணவர்களும் ஆக மொத்தம் 388 மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

இப்பயிற்சியில் இயற்பியல், வேதியியல், தாவரவியல், உயிரியல் பாடங்களுக்கு தனியே பெங்களுரில் சிறப்பு பயிற்சி பெற்ற 10 முதுநிலை ஆசிரியர்களை கொண்டு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி 09.04.2018 முதல் 02.05.2018 வரை ஒவ்வொரு நாளன்றும் காலை 9.00 மணிமுதல் மாலை 5.15 மணி வரை பயிற்சி அளிக்கப்படும். இதில் இயற்பியில், வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்கள் ஒவ்வொன்றிற்கும் 1.45 மணித்துளிகள் வீதம் ஒதுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படும்.

மேற்படி பயிற்சி நாட்களில் தினமும் காலை 7.00 மணிமுதல் 8.30 மணிவரை முன்தின பயிற்சி பாடங்களிலுருந்து தேர்வுகள் நடத்தப்படும். ஞாயிற்றுக்கிழமைகளில் ஒருவாரம் நடைபெற்ற பயிற்சிக்கான பாடங்களிலிருந்து திருப்புதல் மற்றும் தேர்வுகள் நடத்தப்படும். பயிற்சியில் கலந்து கொள்ளும் தமிழ் வழி மாணவர்களுக்கு உணவு மற்றும் இருப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களை வழி நடத்திட மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் நிலையில் மூவரும், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் நிலையில் ஒருவரும், 24 உடற்கல்வி ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.கே.எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.த.இராஜேந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**